**உலர் வலைய நகர நீர் மற்றும் சுகாதார செயற்திட்டம் - 2015**

உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதார செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2009 யூன் 29 ஆம் திகதிய 2477 எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவு, 2009 யூன் 29 ஆந் திகதிய 0129/0130 எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க மற்றும் 2013 பெப்ரவரி 13 ஆந் திகதிய 2977 எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க மானிய உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

செயற்திட்டத்தின் கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம் முன்னாள் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சு தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. வட மாகாணத்தில் மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்கள் மற்றும் வடமேல் மாகாணத்தில் புத்தளம் மற்றும் சிலாபம் மாவட்டங்கள் உள்ளடங்கலாக இலங்கையின் வடக்கு மற்றும் வட மேல் உலர் வலயத்திலுள்ள நகர மக்களின் பௌதீக நலன்களை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் திருத்தியமைக்கப்பட்ட மொத்த கிரயம் ரூபா 19,165 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 163.33 மில்லியனானதுடன் அதில் ஆசிய அபிவிருத்தி வங்கியால் ரூபா 11,809 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 99.78 மில்லியன் அல்லது 61.09 சதவீதம் கடனாக வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 2,649 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 23.22 மில்லியன் அல்லது 14.22 சதவீதம் மானியமாக வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. நெதர்லாந்து நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (என்ரீஎவ்) நீர் நிதியளிப்பு பங்குபற்றல் வசதிக்காக ரூபா 228 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2 மில்லியன் அல்லது 1.22 சதவீதம் மானியமாக ஆசிய அபிவிருத்தி வங்கி ஊடாக வழங்குவதற்கும் உடன்பாடு காணப்பட்டதுடன் மிகுதியாக இருக்கின்ற ஐ.அ.டொலர் ரூபா 4,479 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 38.33 மில்லியன் அல்லது 23.47 சதவீதம் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2009 நவம்பர் 13 இல் தொடங்கியிருந்ததுடன் 2013 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறானினும், செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கல் திகதி 2016 யூன் 30 வரை நீடிக்கப்பட்டது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கத்தினதும் கடன்வழங்கும் முகவர்களிதும் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் மற்றும் மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றை தொடர்ச்சியான அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க, மீளளிப்பிற்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமா என்பதும்,

(உ) விசேட டொலர் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத் திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(ஊ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(எ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டனவா என்பதும்,

(ஏ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளகப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஓ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்
---

### 2.1. அபிப்பிராயம்
---

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத்

தத்துவங்களிற்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க, மீளளிப்பிற்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) விசேட டொலர் கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட, ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நெல் அறுவடைகள் மீதான நட்டங்களில் விவசாயிகளிற்கு செலுத்த வேண்டிய ரூபா 5.46 மில்லியன் தொகையான இழப்பீட்டிற்கான ஏற்பாடு 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 64.88 மில்லியன் பெறுமதியான மோட்டார் வாகனங்கள் தவறான வகைப்படுத்தல் காரணமாக அலுவலக உபகரணங்களின் கீழ் வகைப்படுத்தப்படடு காட்டப்பட்டிருந்தது.

(இ) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையுடன் கைசாத்திடப்பட்ட துணைநிலைக் கடன் உடன்படிக்கையின் கீழ் பொதுத் திறைசேரியால் சாட்டுதல் செய்யப்பட்ட ரூபா 68.50 மில்லியன் தொகையான வட்டி நடைபெறும் வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. ஆசிய அபிவிருத்தி வங்கியால் 2015 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்ட ரூபா 49.79 மில்லியன் தொகையான வட்டிக் கட்டணங்கள் கணக்கிற்கு கொண்டுவரப் பட்டிருக்கவில்லை.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1987 இன் 03 ஆம் இலக்க அரச ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம், ரூபா 5 மில்லியன் அல்லது அதற்கு மேலான பெறுமதியுடைய ஒப்பந்தங்களை ஏற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்கள் அரச ஒப்பந்தத்தின் பதிவாளரின் கீழ் பதியப்பட வேண்டும். மேலும், கேள்வி உடன்படிக்கை கேள்வி வழங்கிய பின்னர் 60 நாட்களிற்குள் அரச ஒப்பந்தத்தின் பதிவாளருடன் பதியப்பட வேண்டும். சேயற்திட்டத்தின் ஒப்பந்த உடன்படிக்கையில் கைசாத்திட்ட 32 ஒப்பந்தகாரர்கள் மேற்குறிப்பிட்ட வேண்டுகைகளுடன் இணங்கியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பெறுமதி சேர் வரிக்கொடுப்பனவு தொடர்பான மாதாந்த அறிக்கை அரசாங்க வழிகாட்டலின் 5.4.12 ஆம் பந்தி, 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவு மற்றும் 2002 செப்தெம்பர் 30 ஆந் திகதிய 364(3) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி என்பவற்றிற்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு செயற்திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2015 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரிகளின் பெறுமதி ரூபா 130.27 மில்லியன் தொகைய

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஏற்பாடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2015 ஆம் ஆண்டின் போது | | 2015 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் |
| ஏடிபீ- கடன் | | | | | | | |
| 2477 | 59.78 | 6,820 | 4,351 | 7.51 | 1,052 | 32.74 | 4,331 |
| 2977 | 40.00 | 4,989 | | 11.82 | 1,655 | 18.62 | 2,533 |
| ஏடிபீ- மானியம் | | | | | | | |
| 129 | 23.22 | 2,649 | 620 | 2.74 | 384 | 13.07 | 1,682 |
| 130 | 2.00 | 228 | | 0.20 | 28 | 1.65 | 206 |
| இலங்கை அரசாங்கம் | 38.33 | 4,479 | | 5.12 | 717 | 17.78 | 2.226 |
| **மொத்தம்** | **163.33** | **19,165** | **4,971** | **27.39** | **3,836** | **83.86** | **10,978** |

செயற்திட்டத்திற்காக செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 113.33 மில்லியன் ஆரம்ப ஒதுக்கீடு நெகிழ்ச்சி வீதங்களின் அடிப்படையில் செய்யப்பட்ட கிரய மதிப்பீடுகள் காரணமாக கடனளிக்கும் முகவரால் ஐ.அ.டொலர் 163.33 மில்லியன் வரை பின்னர் அதிகரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் நிறைவேற்றல் மற்றும் நிதிகளின் பயன்பாட்டில் மெதுவான முன்னேற்றம் செயற்திட்டத்தால் தொடர்ச்சியாக அறிக்கையிடப்பட்டிருந்தது. திருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2½ ஆண்டுகள் கடந்த போதும் திருத்தப்பட்ட ஒதுக்கீட்டில், ஐ.அ.டொலர் 83.86 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

**3.2 பௌதீக செயலாற்றல்**

செயற்திட்டமானது வடக்கு மற்றும் வட மேல் மாகாணங்களில் மற்றும் அத்தகைய பகுதிகளில் பௌதீக நலன்களை முன்னேற்றும் நோக்கில் பல நீர் வழங்கல் மற்றும் சுகாதார நடவடிக்கைகளை அமுலாக்கியதுடன் 2016 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட்ட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு இறுதியில் செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 76 சதவீதம் மாத்திரமேயாகும். மேலும் காலாண்டு ரீதியில் நிதி மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்கட்டி முழுச் செயற்திட்ட காலத்தையும் மேவுகின்ற விரிவான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றின் விலகல்கள் மற்றும் உடனடியாக எடுக்கப்பட்ட அளவீடுகள் என்பவற்றினை இனங்காண இயலக்கூடியவாறு செயல் நடவடிக்கை திட்டத்துடன் காலரீதியான முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, செயற்திட்ட நடவடிக்கைகளின் முறையான அமுலாக்கலிற்காக வினைத்திறனான கட்டுப்பாட்டு கருவியாக செயல்நடவடிக்கை திட்டம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை 03 குளங்களின் புதுப்பிததல் மற்றும் ரூபா 66.65 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் நெற் பயிர்ச் செய்கைக்காக பதியகுளம் மற்றும் கற்குளத்தில் காணி மேம்பாடு என்பவற்றிற்காக வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர் மற்றும் வவுனியா மாவட்ட செயலாளருடன் 2014 இல் புரிந்துணர்வு விஞ்ஞாபனம் கைசாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஒத்திசைவு பெற்றுக்கொள்ளாமல் வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளருடன் மேற்குறிப்பிடப்பட்ட புரிந்துணர்வு விஞ்ஞாபனம் நேரடியாக கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(ii) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், காணியின் ஒரு பகுதியை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தம் ரூபா 4.61 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2014 மே மாதத்தில் கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 3.22 மில்லியன் தொகை விடுவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2014 செப்தெம்பர் மாதத்தில் பூர்த்தியாக்கப்பட வேண்டிய வேலைகள் 2016 மார்ச் மாதம் வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. கமநல அபிவிருத்தி திணைக்களத்தின்

தற்போதைய கமநல திணைக்கள உதவி ஆணையாளர் செயற்திட்டத்தால் அனுப்பப்பட்ட நிதிகள் வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் முன்னாள் கமநல திணைக்கள உதவி ஆணையாளரால் தவறாக பயன்படுத்தியமையால் உரிய வேலைகளை பூர்த்தியாப்க்க முடியாதிருந்ததென பின்னர் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் தற்போதைய கமநல திணைக்கள உதவி ஆணையாளர் அறிவித்திருந்தார்.

(iii) மேற்குறிப்பிட்ட வேலைகளின் பூர்த்தியாக்கலிலுள்ள தாமதம் காரணமாக ரூபா 9.91 மில்லியன் தொகையான இழப்பீடு 2014 மற்றும் 2015 இல் விவசாய அறுவடைகளின் நட்டங்கள் விவசாயிகளிற்கு இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்புகளில் மேலதிகமாக செலுத்த வேண்டியிருந்தது.

(ஆ) வவுனியாவில் மேற்பரப்பு தண்ணீர் அபிவிருத்திக்கான ஒப்பந்தம் ரூபா 956.82 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் இணைந்த கம்பனிக்கு 2013 இல் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்ட நிர்வாக கைநூலின் பிரகாரம், விரவான வடிவமைத்தல், படம்வரைதல், குறிப்புரைகள், அளவீட்டுப் பட்டியல், கேள்வி ஆவணங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் சிவில் வேலைகளின் கொள்வனவிற்காக இணைந்த ஒப்பந்த ஆவணங்கள் என்பவற்றுடன் தொடர்புபட்ட வேலைகள் நீர்ப்பாசன திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் ஆலோசனையாளர் நீர்ப்பாசன திணைக்களத்திடமிருந்து அனுமதி பெற்றுக்கொள்ளாமல் பேறு ஆறு குளத்தில் நிர்மாணத்துடன் தொடர்புபட்ட சகல வடிவமைப்பு வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(ii) பேறு ஆறு மீள்குடியேற்ற பகுதிகளில் சுத்தமாக்கல் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்காக ரூபா 13.27 மில்லியன் கிரயத்தில் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 2.81 மில்லியன் மேலதிக கொடுப்பனவு முரண் கட்டளைகளின் கீழ் செய்யப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. மேலும், இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்புகளிலிருந்து செய்ய வேண்டிய தேவைப்பட்ட மீள்குடியேற்ற நடவடிக்கைகளின் கிரயம் கடன் பெறுகைகளில் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

(இ) 2010 இல் வழங்கப்பட்ட வவுனியா பிரதேச ஆதார நிலையத்திற்கான 03 மாடி அலுவலக கட்டிட நிர்மாணத்திற்காக ரூபா 64.30 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தம் பூர்த்தியாக்கப்பட்டு 2013 சனவரி 24 இல் கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிர்மாண வேலைகளின் இறுதிக் கொடுப்பனவுகள் ஒப்பந்தகாரருக்கும் செயற்திட்டத்திற்கும் இடையில் எழுந்த தகராறுகள் காரணமாக 2015 திசெம்பர் 31 வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2013 மே மாதத்தில் மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் வழங்கப்பட்ட தண்ணீர் பரிமாற்ற மற்றும் விநியோக முறைமை 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 66 சதவீத மெதுவான முன்னேற்றத்தைக் காட்டியிருந்தது. மேலும், தண்ணீர் பரிமாற்ற மற்றும் விநியோக முறைமையின் நிர்மாணங்களில் பொருத்தப்பட்ட குழாய்களின் குறைபாடுகள் 2014 செப்தெம்பரில் இனங்காணப்பட்டதுடன் நேர்த்தியான தரத்துடன் குழாய்களை மாற்றுவதற்கு

ஒப்பந்தகாரர் அறுவுத்தப்பட்டார். எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் 2016 மே 31 வரையும் குழாய்களை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ரூபா 38.85 மில்லியன் கிரயத்தில் 2013 இல் மன்னாரில் வழங்கப்பட்ட நிலத்தடி நீர் வளங்களின் அபிவிருத்திக்கான 02 ஒப்பந்தங்கள் 2016 மார்ச் 31 இல் உள்ளவாறு 49 சதவீதமான மெதுவான முன்னேற்றத்தைக் காட்டியது. மேலும், ரூபா 610 மில்லியன் கிரத்தில் 2014 இல் சிலாபம் மற்றும் புத்தளத்தில் வழங்கப்பட்ட மேற்பரப்பு நீர் வள அபிவிருத்தக்கான ஒப்பந்தம் மற்றும் ரூபா 3.81 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரத்தில் 2014 இல் சிலாபம் மற்றும் புத்தளத்தில் வழங்கப்பட்ட தண்ணீர் சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணம் 2016 மார்ச் 31 வரை ஒவ்வொன்றும் 47 சதவீத மெதுவான முன்னேற்றத்தைக் காட்டியது.

(ஊ) ஒட்டுமொத்த செயற்திட்ட அமுலாக்கல் திட்டத்தின் வேலைகளின் 16.5 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 04 ஒப்பந்தங்கள் 2014 இல் அத்தகைய ஒப்பந்தங்கள் பூர்த்தியாக்கப்பட வேண்டிய போதிலும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே 8 சதவீதம் முதல் 82 சதவீதம் வரையான மெதுவான முன்னேற்றத்தைக் காட்டியிருந்தது. மேலும், ஒட்டு மொத்த செயற்திட்ட அமுலாக்கல் திட்டத்தின் வேலைகளின் 27 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வேறு 10 ஒப்பந்தங்கள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 15 சதவீதம் முதல் 88 சதவீதம் வரையிலான வீச்சில் இருந்தது.

### 3.4 செயற்திட்டத்தின் நோக்கத்திற்கு புறம்பான நிதிகளின் பயன்பாடு

செயற்திட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்காத தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் 03 ஊழியர்களின் ரூபா 2.49 மில்லியன் தொகையான வேதனம் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்புகளில் செயற்திட்டத்தால் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.5 முன்னைய கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட தீர்க்கப்படாத விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை அரசாங்கத்தின் பெறுகைகளில் 2008 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட ரூபா 7.8 மில்லியன் தொகையான செலவினம் கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் மற்றும் உரிய ஆதாரமான ஆணவங்கள் கிடைக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை. இந்த நிலை என்னுடைய முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் அத்தகைய சான்றுகள் 2015 திசெம்பர் 31 வரையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 12.21 மில்லியன் தொகையான இலங்கை அரசாங்க பங்களிப்பு பெறுகைகள் கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் அவற்றிற்கு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 57 மில்லியன் ஒதுக்கீட்டினை பயன்படுத்தாமல் 2009 முதல் 2013 வரை நிர்மாண உபகரணங்கள், பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

**3.6 நிதிக்கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயற்திட்ட கண்காணிப்பு பிரிவு அமுலாக்கல் முகவருடன் முறையான ஒருங்கிணைப்பை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் இதன் விளைவால் சிவில் நடைபெறும் வேலைகளின் பெறுமதி ரூபா 10,135.79 மில்லியனாகும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 10,180.19 மில்லியன் சிவில் நடைபெறும் வேலைகளின் பெறுமதியுடன் உடன்பட்டிருக்காததுடன் ரூபா 44.40 மில்லியன் வித்தியாசத்தை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 134(3) மற்றும் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.7 அசாதாரண நடவடிக்கைகள்**

செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்கி 5 ஆண்டுகள் கடந்த பின்னர் ரூபா 628,932 கிரயத்தில் கணக்கீட்டு நோக்கத்திற்காக கணனி பொதியொன்றினை கொள்வனவு செய்வதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருந்தது. எவ்வாறாயினும், முறைமையில் அமுலாக்கலில் அவதானிக்கப்பட்ட பல குறைபாடுகள் குறித்த நோக்கத்திற்கான வினைத்திறனான பயன்பாட்டிற்காக 2016 மே 31 இலும் திருத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.